இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி


Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 04 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 28 – வியாழக்கிழமை 13 ஆகஸ்ட் 2026 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 04 : Thiruvalluvar Year - 2057 - Aadi 28 - Thursday 13 August 2026 - Trichy ★★ 10 Pages ₹ 5.00

## ‘கண்ணியமாக பேச வேண்டும்’ – த.வெ.க. உறுப்பினருக்கு பேரவைத் தலைவர் அறிவுரை!

# தமிழ்நாட்டில் ‘நீட்’ தேர்வை நுழைய விடாமல் தடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (12.08.2026), சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில், ஃபெப்சி தலைவர் ஆர்.கே.செல்வமணி, தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் ஜி.கே.எம். தமிழ் குமரன், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்க நிர்வாகி சித்ரா லட்சுமணன் உள்ளிட்ட திரையுலகினர் நேரில் சந்தித்தனர். அப்போது, தமிழ்த் திரையுலகில் இயக்கம் மற்றும் திரைக்கதைத் துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கிய இயக்குநர்கள் பாரதிராஜா மற்றும் கே.பாக்யராஜ் ஆகியோரின் கலைப்பயணத்தையும், சாதனைகளையும் கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள “ராஜகோபுரங்களின் நினைவு உற்சவம்” விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினர்.

### ‘நீட்’ தேர்வுக்கு எதிரான

## வாகனப் பேரணியை முடக்கியது ஏன்?

### த.வெ.க. அரசுக்கு உயர்நீதிமன்றம் கண்டனம்!

*சென்னை, ஆக. 13 -* நீட் தேர்வுக்கு எதிரான இருசக்கர வாகனப் பேரணியை முடக்குவது ஏன்? என த.வெ.க. அரசின் காவல்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் சரமாரியாகக் கேள்வி எழுப்பியுள்ளது.

நீட் தேர்வு, பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கான இடஒதுக்கீடு ஆகியவற்றை எதிர்த்து இருசக்கர வாகன பிரச்சாரப் பயணம் மேற்கொள்ள அனுமதி கோரி திராவிடர் கழகம் தொடர்ந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, வாகனப் பேரணிக்கு அனுமதி கோரி அளித்த மனுக்கள் அனைத்தும் போக்குவரத்து நெரிசலை காரணம்காட்டி நிராகரிக்கப்பட்டுள்ளதாக திராவிடர் கழகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வாதங்கள் அனைத்தையும் கேட்ட நீதிபதி வி.லட்சுமி நாராயணன், பேச்சுரிமை, கருத்துரிமை போல், போராடுவதும் மக்களின் அடிப்படை உரிமை என குறிப்பிட்டார்.

பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து காரணங்களால் அனுமதி மறுத்தால் ஹெலிகாப்டரில் சென்றா போராட முடியும் எனக் கேள்வி எழுப்பிய நீதிபதி, வழக்கின் விசாரணையை ஆகஸ்ட் 17ஆம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

## பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக. 13 -**

**சட்டப்பேரவையில் ‘நீட்’ தேர்வை ரத்து செய்யக்கோரும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “தமிழ்நாட்டில் நீட் தேர்வை நுழையவிடாமல் தடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**



நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற முந்தைய தி.மு.க. ஆட்சியில் தீவிர சட்டப்போராட்டம் நடத்தப்பட்டதாக எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் நீட் நுழைவுத் தேர்வை ரத்து செய்யக் கோரும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றது.

அப்போது த.வெ.க. அமைச்சரின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், நீட் நுழைவுத் தேர்வை தமிழ்நாட்டில் நுழைய விடாமல் தடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்று பெருமிதம் தெரிவித்தார்.

பொதுப்பணித்துறை அமைச்சர் அப்போது குறுக்கீட்டு நீட் மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்தது குறித்துப் பேசினார்.

உடனே எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நீட் தேர்வை இந்தியா முழுவதும் கொண்டுவந்தாங்க; ஆனாலும் தமிழ் நாட்டிற்குள் அதனை ‘அலோவ்’ செய்யவில்லை தமிழ் நாட்டிற்கு விதிவிலக்கு வாங்கித்தந்தவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் என்று குறிப்பிட்டார்.

**தி.மு.க. கொறடா எ.வ.வேலு கண்டனம்!**

இதற்கிடையே, நீட் தேர்வு தொடர்பாக சட்டப்பேரவையில் பொய்யான தகவல்களை கூறிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவுக்கு தி.மு.க. கொறடா எ.வ.வேலு கண்டனம் தெரிவித்தார். நாடுமுழுவதும் நீட் தேர்வு கொண்டுவந்த போது, தமிழ்நாட்டில் நீட் தேர்வை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என உறுதியாக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்றும் அவர் கூறினார்.

**‘நீட்’ தேர்வு ஒரு ஊழல்!**

நீட் தேர்வு வந்தபோது, நாட்டிலேயே முதன்முதலாக எதிர்ப்புக் குரல் கொடுத்தது தி.மு.க. தான் என்றும், நீட் தேர்வை முதன்முதலில் எதிர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்றும் தெரிவித்தார். நீட் தேர்வு ஒரு Scam என்பதை 10 ஆண்டுகளுக்கு முன்பே கூறியது தி.மு.க. தான் என்றும் முத்துராஜா எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.

நீட் தேர்வு ஒரு குளறுபடி, ஒரு ஊழல் என தி.மு.க. தொடர்ந்து கூறி வருகிறது . நீட் ஒரு தேசிய ஆபத்து என்பதை தி.மு.க. தொடர்ந்து கூறி வருகிறது. தி.மு.க. ஆட்சியில் நீட் தேர்வுக்கு எதிராக சட்டப்பேரவையில் மசோதா நிறைவேற்றப்பட்டது. நீட் தேர்வுக்கு எதிராக 12 மாநில முதலமைச்சர்களுக்கு கடிதம் எழுதி ஆதரவு கோரினார் அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

மருத்துவம் மட்டுமா படிப்பு; நீட் மட்டுமா உலகம் என பேசியவர் தான் விஜய் - மருத்துவம் மட்டும் தான் படிப்பா...? எலக்ட்ரீசியன், பிளம்பர், கார்பெண்டர் வேலைக்குச்செல்லலாம் என கூறியவர்தான் த.வெ.க. அமைச்சர் நீட் தேர்வுக்கு

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்

### அடுத்த ஜென்மத்தில் விவசாயியாகப் பிறக்க வேண்டுமென்று சொல்லி ஆட்சிக்கு வந்த முதல்வர்

# வேளாண் துறைக்கு நிதியைக் குறைத்து விவசாயிகளை வஞ்சிப்பதா?

## சட்டப்பேரவையில் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேள்வி!

**சென்னை, ஆக. 13 -**

**“அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருந்தால் நான் விவசாயியாகப் பிறக்க வேண்டும் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த முதலமைச்சர், வேளாண் துறைக்கு நிதியைக் குறைத்தது ஏன்?” என்று சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேள்வி எழுப்பினார்.**

சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் பேசியதாவது:-

இந்த மாமன்றத்தில் நாங்கள் எதிர்க் கட்சியாக வந்து இப்போது உங்களிடம் பேசுகின்றோம். கடந்த ஆண்டு அங்கு உட்கார்ந்து பட்ஜெட்டை அளித்தோம். இப்போது புதிய ஆட்சி அமைந்து, புதிய அமைச்சர்கள் வந்து இங்கே பட்ஜெட், வேளாண் பட்ஜெட்டைப் படித்திருக்கின்றார்கள். ஆனால், நான் படித்தேன்; புதிதாக ஏதோ மாற்றம் மாற்றம் என்று சொன்னார்களே மாற்றாக புதிதாக பட்ஜெட்டில் வரும். விவசாயிகளுக்கெல்லாம் வாழ்வு வரும்.

**மாற்றத்தையே காணோம்!**

இன்னும் சொல்லப்போனால் முதலமைச்சர் அவர்கள் தஞ்சையில் தேர்தலுக்கு முன்பாக பேசும்போது, அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருந்தால், நான் விவசாயக் குடும்பத்தில் பிறக்க வேண்டுமென்று அங்கே பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள் 5, 6 மாதங்களுக்கு முன்பு பேசும்போது எதிர்பார்த்திருக்க மாட்டார்.

இப்போது ஆட்சியின் தலைவராக, முதலமைச்சராகப் பொறுப்பேற்று, வேளாண்மை திருத்திய நிதிநிலை அறிக்கை



அளிக்கப்பட்டுள்ளது. எங்களுடைய தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்த திட்டங்கள், வேளாண்மை Budgetஐ ஐந்தாண்டு காலமாக நாங்கள் தாக்கல் செய்துள்ளோம். ஆக, அந்தத் திட்டங்கள் தொடருமா, தொடராதா என்ற சந்தேகத்திலே இருக்கும்போது, தொடரும் என்று அறிவித்திருக்கின்றார்கள். அந்த அறிவிப்பும், புதிய அறிவிப்பு மாற்றம் மாற்றம் என்று சொல்லி, மாற்றம் தருவோம் என்று சொல்லி வந்திருக்கின்றீர்கள். ஆக, வேளாண்மை Budgetல் ஏதாவது மாற்றம் இருக்குமா என்று ஆவலாகப் படித்துப் பார்த்தால், மாற்றத்தையே காணோம், மாற்றத்தையே காணோம் என்ற ஏமாற்றம்தான் அதிகமாக இருக்கிறது என்பதை நான் இங்கே அமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்போது இந்த Budgetல் பேசுவதற்கும், 7வது முறையாக சட்டமன்றத்திலே இங்கே கலந்துகொண்டு பேசுவதற்கும் வாய்ப்பினைத் தந்த என்னுடைய தலைவர், முன்னாள் முதலமைச்சர் அண்ணன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, எங்களையெல்லாம் ஆளாக்கிய கலைஞர் அவர்கள், முதன்முதலாக 1996ல் என்னை இந்த மன்றத்தில் வெற்றி பெற வைத்து அமைச்சராக்கினார்கள். அவர் காலத்திலே, கொள்கை இன்னும் சொல்லப் போனால், முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு அரசியல் கட்சிகளாகிய நீங்கள் செய்தித்தாள்களைப் படிக்கவில்லையா

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்